அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 18/95

எனது இல. 1/543 ஆர்/02டி/02/93/2
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1995, 08. 08

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**பொது எழுதுநர் சேவையின் பதவிகளுக்குரிய கருமங்களை புரிவதற்கு வேறு சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல்.**

பொது எழுதுநர் சேவையின் பதவிகள் மற்றும் பொது எழுதுநர் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களால் புரியப்பட வேண்டிய அரச கருமங்களை புரியும் பொருட்டு வேறு எழுதுநர் சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்று அதனால் பொது எழுதுநர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சோர்வடைந்துள்ளார்களென்றும் இணைந்த சேவைகளை நடாத்திச் செல்வதன் மூலம் அரசு எதிர்பார்க்கும் குறிக்கோள்களை எய்துவதற்கு அது தடையாயிருக்கின்றதென்றும் தொழிற்சங்கங்கள் அரசுக்கு எடுத்துக்காட்டியுள்ளது. பல திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் பலவிதமான முறைகளை கையாளுவதால் அரச சேவையின் ஒருமைப்பாட்டை பேணிக் காக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என்றும் அவர்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ஆகையால் பொது எழுதுநர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பதவிகள் மற்றும் அவ் உத்தியோகத்தர்கள் புரிய வேண்டிய அரச கருமங்களை புரி[யும்] பொருட்டு சார்ந்த சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளைச் சேர்ந்த உத்தியோ[கத்]தர்களை ஈடுபடுத்த வேண்டாம் என்பதுடன் தற்போது அவ்வாறு ஈடுபடுத்தியிருப்பின் அத்தவறை நிவர்த்தி செய்யும்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.